**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்.**

முன்னிலை திருமதி. K. ஸ்ரீபதி, B.A., L.L.B.,
நீதித்துறை நடுவர், வாணியம்பாடி.
2026 ஆம் ஆண்டு மார்ச் 23 ஆம் நாள் திங்கள்கிழமை
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 75/2023
CNR NO. TNTU09-002583-2023

| வரிசை எண். | விளக்கம் | விவரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர், திம்மாம்பேட்டை காவல் நிலையம், குற்ற எண். 8/2015. |
| 2. | எதிரி | முருகன் (எ) கானாமுருகன் த/பெ செல்வம் |
| 3. | குற்றம் | இ.த.ச. பிரிவுகள் 457, 380. |
| 4. | சம்பவம் நடந்த தேதி | 25.01.2015 |
| 5. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள். | 29.01.2015 |
| 6. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | 27.10.2015 - 21.11.2015 |
| 7. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 27.04.2023 |
| 8. | கு.வி.மு.ச.பிரிவு 241-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 15.09.2023 |
| 9. | கு.வி.மு.ச.பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யபட்ட விவரம் அதன் முடிவுகள். | - |
| 10. | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | அ.சா.1-09.10.2023<br>அ.சா.2-10.11.2023<br>அ.சா.3, அ.சா.4, அ.சா.5-09.08.2024<br>அ.சா.6 - 12.02.2026 |

| | | |
|---|---|---|
| | | அ.சா.7–19.02.2026<br>அ.சா.8–23.02.2026<br>அ.சா.9–24.02.2026 |
| 11. | எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச.313(1) (ஆ)–ன் கீழ் வினவிய நாள் | 11.03.2026 |
| 12. | எதிரிகள் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | – |
| 13. | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 23.03.2026 |
| 14. | தீர்வு | கு.வி.மு.ச. பிரிவு 248(1) ன்கீழ் விடுதலை. |

**<u>நீதித்துறை படிவம் எண்: 61</u>**

புகார்தாரர் : அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர், திம்மாம்பேட்டை காவல் நிலையம்.

எதிரி : முருகன் (எ) கானாமுருகன் த/பெ செல்வம்

குற்றம் : இ.த.ச. பிரிவு. 457, 380.

முடிவு : இறுதியாக, இவ்வழக்கில் எதிரிக்கு எதிரான இ.த.ச. பிரிவுகள் 457, 380 கீழான குற்றச்சாட்டானது அதன் ஆக்க கூறுகளை மெய்ப்பிக்கும் விதத்தில் தக்க சாட்சிகள் மற்றும் சான்றவணங்களின் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு அளித்து, எதிரியை இவ்வழக்கில் இருந்து கு.வி.மு.ச. பிரிவு 248(1) ன்கீழ் விடுதலை செய்து உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

| வ. எண் | எதிரி பெயர் | தந்தை பெயர் | சாதி (அ) இனம் | தொழில் | முகவரி | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1. | முருகன் (எ) கானாமுருகன் | செல்வம் | இந்து | கூலி | கோணாம்மேடு, வாணியம்பாடி | 48 |

| தேதி | | | | | | | தாமதம் (ம) அதன் விளக்கம். |
|---|---|---|---|---|---|---|---|
| குற்றம் | புகார் அறிக்கை | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் | வழக்கு விசாரணையின் தொடக்கம் | வழக்கு விசாரணையின் முடிவு | உத்தரவு | ... |
| 25.01.15 | 29.01.15 | 27.10.15 | 21.11.15 | 15.09.23 | 11.03.26 | 23.03.26 | – |

இவ்வழக்கானது 27.04.2023 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு 11.03.2026–ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றதுறை உதவி வழக்கறிஞர் நிலை 1 திருமதி.மகேஸ்வரி அவர்கள் ஆஜராகியும் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M.பிரபாகரன்., B.Com., B.L., அவர்களும் ஆஜராகி இது நாள் வரை விசாரணை செய்தும் வழக்கின் சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் இவ்வழக்கில் வழங்கிடும்

**தீர்ப்புரை**

**1. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:**

இவ்வழக்கில் திம்மாம்பேட்டை காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட நாராயணபுரம் கிராமத்தில் உள்ள ஸ்ரீ நாகாலம்மன் கோவிலில் கடந்த 25.11.2015ம் தேதி கிரில் கேட்டின் பூட்டை உடைத்து உள்ளே சென்று அங்கு இரண்டு உண்டியல்களில் இருந்த பணம் மற்றும் ஆம்பிளிஃபையர் ஒன்று ஆக மொத்தம் மதிப்பு ரூ.3,000/– உள்ளதை திருடிச் சென்றுள்ளார். எனவே, எதிரி இ.த.ச பிரிவுகள் 457, 380ன்படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக வாணியம்பாடி நகர காவல் நிலைய உதவி ஆய்வாளர் எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரி மீது முகாந்திரம் வழக்கு இருப்பதால் இவ்வழக்கானது நீதிமன்றத்தால் இ.த.ச.பிரிவுகள் 457, 380ன் கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இந்த வழக்கில் எதிரி ஆஜரானதும், வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு கு.வி.மு..ச 207–ன்படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. குற்றம்சாட்டப்பட்ட நபர்களுக்கு போதிய அவகாசம் கொடுத்து, ஆவணங்களை பரிசீலித்தும், எதிரி மீதான குற்ற செ யல்கள் விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்த காரணத்தினால் எதிரி மீது இதச பிரிவுகள் 457, 380ன் கீழ் குற்றத்தின் சாராம்சத்தை விளக்கி கூற வினவியபோது, எதிரி குற்றத்தை மறுத்துரைத்ததால் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.9** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். **அ.சா.ஆ1 முதல் அ.சா.ஆ.7** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் மூலம் தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

5 (i) அ.சா.1 கிருஷ்ணன் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். அ.சா.1 கிருஷ்ணன் சுமார் 10 வருடத்திற்கு முன்பு பைபாஸ் மலையடிவாரத்தில் உள்ள நாகாலம்மன் கோவிலின் பூட்டை உடைத்து உண்டியலை உடைத்து பணத்தை எடுத்தும், ஆம்பிளிஃபையர் 2 ஆகியவற்றை யாரோ திருடிச் சென்றிருந்ததை குறித்து அ.சா.1 கிருஷ்ணன் திம்மாம்பேட்டை காவல் நிலையத்தில் அ.சா.ஆ.1 புகார்மனுவை அ.சா.6 திரு.சேகர், உதவி ஆய்வாளரிடம் கொடுத்துள்ளார்.

5 (ii) அ.சா.1 கொடுத்த புகார் மனுவை அ.சா.6 திரு.சேகர், உதவி ஆய்வாளர் பெற்று அதற்கேற்ப நிலைய குற்ற எண் 8/2015 இ.த.ச பிரிவுகள் 457, 380ன் கீழ் அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்பு, அதே நாள் பகல் 16.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் அ.சா.4 திருப்பதி மற்றும் அ.சா.5 சாமு ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு அ.சா.ஆ.5 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்.

5 (iii) பின்பு சாட்சிகள் அ.சா.1 கிருஷ்ணன், அ.சா.2 ஆனந்தன், அ.சா.3 மாணிக்கம்மாள், அ.சா.4 திருப்பதி மற்றும் அ.சா.5 சாமு ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின் வழக்கு கோப்பை மேல்விசாரணைக்காக அ.சா.8 திரு. மோகன்தாஸ், உதவி ஆய்வாளரிடம் ஒப்படைத்ததை அவர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு எதிரியை தேடி வந்த நிலையில் கடந்த 08.04.2015ம் தேதி நாட்றம்பள்ளி காவல் நிலைய குற்ற எண்.119/2015 பிரிவு 394 வழக்கில் நாட்றம்பள்ளி காவல் ஆய்வாளர் திரு.பழனி என்பவர் புலன்விசாரணை செய்ததில் எதிரி முருகன் (எ) கானா முருகன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் திம்மாம்பேட்டை காவல் நிலைய சரகம் நாராயணபுரம் நாகாலம்மன் கோவிலில் திருடுபோன உண்டியல் பணம் ரூ.1500, பழைய ஆம்பிளிஃபையர் ஆகியவற்றை திருடியதாக தெரிய வந்ததை தெரிந்து கொண்டு 15.10.2015ம் தேதி திம்மாம்பேட்டை காவல் நிலைய குற்ற எண்.8/2015 இதச பிரிவுகள் 457, 380 என்ற வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி முருகன் (எ) கானா முருகன் மற்ற வழக்குகளில் மத்திய சிறையில் இருந்ததால் சம்பிரதாய கைது செய்வதற்கு ஆவணங்கள் தயார் செய்து நீதிமன்றத்தில் சமர்பித்து இவ்வழக்கின் புகார்தாரரான கிருஷ்ணனுக்கு எதிரியை பிடித்துவிட்டது குறித்தும், வழக்கு சொத்தான பணத்தை எதிரி செலவழித்து விட்டார் என்பதை தெரிவிப்பதற்காகவும் மீண்டும் வரவழைத்து மறுவாக்குமூலம் பதிவு செய்து எதிரி முருகன் (எ) கானா முருகனிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்த ஆய்வாளர் திரு.பழனி என்பவரை விசாரித்து அ.சா.ஆ.7 ஒப்புதல் வாக்குமூலத்தின் சான்றிட்ட உண்மை நகலையும், ஒப்புதல் வாக்குமூலத்தின் சாட்சிகளாக கையொப்பமிட்ட அ.சா.7 நேரு மற்றும் முருகன் த/பெ.செல்வம் ஆகிய இருவரின் குவிமுச பிரிவு 161(3) சான்றிட்ட நகலையும் பெற்று இவ்வழக்கில் திருடப்பட்ட உண்டியல் பணத்தை எதிரி செலவு செய்துவிட்டதாக கூறியதால் இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றி தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், புலன் விசாரணையை முடித்து எதிரி மீதான குற்றம் உண்மையென தெரிய வந்ததால் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 457, 380ன்கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்தும் மற்றும் சான்றாவணங்களில் இருந்தும் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு பாதகமாக அமைந்த சாட்சிய சூழ்நிலைகளை எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(i)(ஆ)–ன் கீழ் வினவியபோது எதிரி மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பொய் என்று கூறினார். மேலும், எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சம்பவத்தை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்.**

7. இவ்வழக்கில் எதிரி கடந்த 25.11.2015ம் தேதி நாராயணபுரம் கிராமத்தில் உள்ள ஸ்ரீ நாகாலம்மன் கோவிலின் கிரில் கேட்டின் பூட்டை உடைத்து உள்ளே சென்று அங்கு இரண்டு உண்டியல்களில் இருந்த பணம் மற்றும் ஆம்பிளிஃபையர் ஒன்று ஆக மொத்தம் மதிப்பு ரூ.3,000/– உள்ளதை திருடிச் சென்றுள்ளதாக அரசு தரப்பில் எதிரி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

8. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட தனி நபர் சாட்சிகள் யாரும் எதிரி தான் குற்றம் புரிந்தார் என்பதனை நிரூபிக்கவில்லை என்றும், இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து விடுதலை செய்ய வேண்டுமென வாதங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.

9. இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 கிருஷ்ணன் அவர் கொடுத்த அ.சாஆ.1 புகார் மனுவில் " நாராயணபுரத்தில் எல்லையில் உள்ள நாகாலம்மன் கோவிலில் 25.01.2015ம் தேதியில் இரவு யாரோ திருடர்கள் பூட்டை உடைத்து கோயிலுக்கு உள்ளே சென்று கோயில் உள்ளே இருந்த இரண்டு உண்டியல் திருடி கொண்டு கோயிலுக்கு வெளியே சென்று உடைத்துஅதிலிருந்த பணத்தை திருடிக்கொண்டும் கோயிலில்

உபயோகித்துக்கொண்டிருந்த ஆம்பிளிஃபையரையும் திருடிக்கொண்டு போய்விட்டார்கள். " என புகார் மனு அளித்துள்ளார் என்பது புலனாகிறது.

10. புகார்தாரர் அ.சா.1 கிருஷ்ணன் அவரது நீதிமன்ற விசாரணையின்போது, " சுமார் 10 வருடத்திற்கு முன்பு பைபாஸ் மலையடிவாரத்தில் உள்ள நாகாலம்மன் கோவிலின் பூட்டை உடைத்து உண்டியலை உடைத்து பணத்தை எடுத்தும், ஆம்பிளிஃபையர் 2 ஐ எடுத்துக்கொண்டும் சென்றதாக அங்கு வேலை செய்யும் ஒரு அம்மா கூறினார். திருடுபோன பொருள் திரும்ப கிடைக்கவில்லை. " என சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது " சம்பவம் குறித்து எனக்கு அந்த கோவிலில் வேலை செய்யும் மாணிக்கம்மாள் சொல்லி தான் தெரியும் என்றும், எழுதப்படாத வெள்ளை தாளில் ஒரு கையொப்பம் பெற்றுக்கொண்டு புகாரை நாங்களே எழுதிக்கொள்கிறோம் என சொல்லிவிட்டார்கள் என்றும், இன்று வரை அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியாது என்றும், நான் திருடுபோன பொருட்களை நேரிடையாக பார்க்கவில்லை என்றும், வழக்கு விவரம் எதுவும் தெரியாது. " என அவரது முதன்மை சாட்சியத்திற்கு முற்றிலும் முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

11. இவ்வழக்கின் கேள்வியுற்ற சாட்சியான அ.சா.2 ஆனந்தன், தனது நீதிமன்ற விசாரணையின்போது, " சுமார் 4, 5 வருடங்களுக்கு முன் நாராயணபுரத்தில் நான் ஊராட்சி மன்ற தலைவராக இருந்தேன். அந்த காலகட்டத்தில் நாகலம்மன் கோவிலில் உள்ள சிலை திருடுபோயிருப்பதாக அந்த ஊரின் தர்மகர்த்தாவின் மகன் கிருஷ்ணன் அதைபார்த்து என்னிடம் கூறினார். நான் சென்று பார்த்தபோது திருடுபோயிருந்தது. அதை யார் திருடினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. " என சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது " என்ன சிலை திருடுபோனது என்பது குறித்து எனக்கு தெரியாது என்றும், போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றும், எனக்கு வழக்கு விவரமும் தெரியாது. " என அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

12. மற்றொரு கேள்வியுற்ற சாட்சியான அ.சா.3 மாணிக்கம்மாள் தனது நீதிமன்ற விசாரணையின்போது, " நாராயணபுரம் நாகாலம்மன் கோவிலில் கடந்த 2015ம் வருடம் கூட்டிப்பெருக்கும் துப்புரவு தொழில் செய்து வந்தேன். சுமார் 12 வருடங்களுக்கு முன்பு கோவிலில் யாரோ திருடி விட்டு சென்றுவிட்டதாக போலிசார் வந்து விசாரித்தார்கள். " என சாட்சியம் அளித்துள்ளார்.

13. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அ.சா.3 மற்றும் அ.சா.7 வரையிலான சாட்சிகள் வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் இல்லையென புலனாகிறது. மேலும், அ.சா.1 சாட்சியத்திலும், புகாரிலும் **திருடிச் சென்றது யார் என்று குறிப்பிட்டு புகார் மற்றும் சாட்சியம் அளிக்கவில்லை** என்பது புலனாகிறது. கேள்வியுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோரின் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில் கோவிலில் திருடுபோனது நிரூபணமாகிறது. ஆனால், எதிரியை குற்ற சம்பவத்துடன் தொடர்புபடுத்தி யாரும் சாட்சியம் அளிக்கவில்லை. இச்சூழ்நிலையில், சூழ்நிலை சாட்சிகளின் தொடர் சங்கிலி மூலம் எதிரி தான் வழக்கு சம்பவத்தை செய்தார் என்று அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பது தீர்மானிக்க வேண்டியுள்ளது.

14. இவ்வழக்கின் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.4 திருப்பதி தனது நீதிமன்ற விசாரணையின்போது, " சுமார் 10 வருடத்திற்கு முன்பு காலை 09.10 மணியளவில் நாராயணபுரத்தில் கடைக்கு சென்றேன். நாகாலம்மன் கோவிலில் அருகே போலிசார் நின்று கொண்டிருந்தார்கள். அங்கு கோவில் உண்டியல் திருடுபோய்விட்டதாக விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். என்னிடம் ஒரு கையொப்பம் பெற்றார்கள். 10, 12 வருடம் ஆனதால் வேறு என்ன செய்தார்கள் என்று நினைவில்லை. " என சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையின்போது, **" வெற்று வெள்ளை தாளில் கையெழுத்து வாங்கினார்கள். "** என சாட்சியம் அளித்துள்ளார்.

15. இவ்வழக்கின் மற்றொரு பார்வை மகஜர் சாட்சியான அ.சா.5 சாமு தனது நீதிமன்ற விசாரணையின்போது, " 2015ல் நாராயணபுரம் நாகாலம்மன் கோவில் உண்டியல் திருடுபோய்விட்டது. நாகாலம்மன் கோவிலில் அருகே போலிசார் நின்று புகார் எழுதி

கொண்டிருந்தார்கள். அங்கு வந்து சென்றதற்காக என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். " என சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையின்போது, **" போலிசார் வந்து சென்றதற்காக என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். "** என சாட்சியம் அளித்துள்ளார்.

16. ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.7 நேரு தனது நீதிமன்ற விசாரணையின்போது, " சுமார் 10-15 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை 03.00-04.00 மணியளவில் நானும் முருகன் என்பவரும் லட்சுமிபுரம் பஸ்ஸ்டாப் இடம் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது நாட்றம்பள்ளி போலிசார் ஒரு நபரை பிடித்து விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது நாங்கள் இருவரும் பக்கத்தில் இருந்தோம். விசாரித்தபோது அந்த நபர் அவருடைய பெயர் முருகன், வாணியம்பாடி பக்கத்தில் உள்ள ஒரு சிறிய ஊரை சேர்ந்தவர் என்று சொன்னார். கத்தியை காண்பித்து நிறைய நபர்களிடம் பணம், நகை போன்றவற்றை வழிப்பறி செய்வதாக சொன்னார். வாணியம்பாடியில் ஒரு வீட்டில் இருந்து நகை திருடியதாகவும், சூ கம்பெனியில் வேலை செய்வதால் வரும் சம்பளம் பத்தவில்லை என்பதால் இதுப்போன்ற குற்ற செயல்களை செய்வதாகவும் சொன்னார். நாராயணபுரத்தில் நாகலம்மன் கோவில் பூட்டை உடைத்து உண்டியல் , பணம் அதில் உள்ள பொருட்களை திருடி சென்றதாகவும் சொன்னார். **மேற்படி நபரை அன்று ஒரு நாள் மட்டும் தான் பார்த்தேன். அப்போது அவர் தாடி வைத்திருந்தார். தற்போது பார்த்தால் என்னால் அடையாளம் கூற இயலுமா என்றால் 10 வருடங்களுக்கு மேல் ஆனதால் சரியாக நினைவிற்கு வருமா என்று தெரியவில்லை.** " என சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையின்போது, **" திம்மாம்பேட்டை காவல் நிலையத்தார் பதிவு செய்த வழக்கு குறித்து நேரடியாக தெரியாது எனவும், திம்மாம்பேட்டை காவல் ஆய்வாளரிடம் நான் இந்த வழக்கில் பொருட்கள் கைப்பற்றியதற்கோ, ஒப்புதல் வாக்குமூலத்திலோ கையொப்பம் செய்யவில்லை என்று சொன்னால் என்னிடம் நாட்றம்பள்ளி போலிசார் என்று சொன்னார்கள் நான் கையொப்பம் செய்தேன். "** என சாட்சியம் அளித்துள்ளார்.

17. எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்த அ.சா.9 பழனி காவல் ஆய்வாளர் அவரது சாட்சியத்தில் " கடந்த 2015ம் வருடத்தில் வாணியம்பாடி நகர காவல்

நிலையத்தில் காவல் ஆய்வாளராக இருந்தேன். நாட்றம்பள்ளி காவல் நிலையத்திற்கு கூடுதல் பொறுப்பும் வகித்தேன். நாட்றம்பள்ளி காவல் நிலைய குற்ற எண் 119/2015, சட்டப்பிரிவுகள் 394 இதச என்ற வழக்கில் எதிரிகளை தேடி வந்த நிலையில் 08.04.2015ம் தேதி 15.30 மணிக்கு நாட்றம்பள்ளி அடுத்த லட்சுமிபுரம் பஸ் ஸ்டாப்பிடம் பின்னால் பெயர், விலாசம் கேட்டுத்தெரிந்த முருகன் (எ) கானா முருகன் என்பவரை பிடித்து விசாரிக்க அவர் எந்த விதமான ஆசை வார்த்தையோ அச்சுறுத்தலோ தூண்டுதலோ இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முருகன், த/பெ. செல்வம், நேரு ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் வாணியம்பாடி, நாட்றம்பள்ளியில் பூட்டிய வீடுகளை உடைத்தும், பூட்டிய கார்களை உடைத்தும், கோவில் உண்டியல்களை உடைத்தும், பல இடங்களில் திருடியதாக ஒப்புக்கொண்டார். மேலும், திம்மாம்பேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட நாராயணபுரம் ரோட்டில் உள்ள நாகாலம்மன்கோவில் பூட்டை உடைத்து ஆம்பிளிபையர் டெக் ஒன்று, உண்டியலை உடைத்து பணம் ரூ.1,500/– திருடியதாக ஒப்புக்கொண்டார். மேலும், அவ்வாறு திருடிய பணத்தை செலவு செய்துவிட்டேன் என்றும், திருடிய டெக்கை பழைய இரும்பு கடையில் போட்டுவிட்டதாகவும் வாக்குமூலத்தில் ஒப்புக்கொண்டார். ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் செய்த முருகன், நேருவை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். திம்மாம்பேட்டை காவல் நிலைய குற்றத்திலும் ஈடுபட்டுள்ளார் என்ற சங்கதியை சம்மந்தப்பட்ட புலன்விசாரணை அதிகாரி திரு.மோகன்தாஸ், உதவி ஆய்வாளர் அவர்களுக்கு தெரிவித்து எதிரி முருகன் (எ) கானா முருகனின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான முருகன், நேரு ஆகியோரின் 161(3) வாக்குமூலங்களின் சான்றிட்ட நகல்களையும் திரு.மோகன்தாஸ், உதவி ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்தேன். " என சாட்சியம் அளித்துள்ளார்.

18. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.6 திரு.சேகர், உதவி ஆய்வாளர் அவரது சாட்சியத்தில் அ.சா.1 கொடுத்த அ.சா.ஆ.1 புகார் மனுவை பெற்று அதற்கேற்ப அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததை குறித்தும், பின்பு அதே நாள் மாலை 17.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் முன்னிலையில்

சம்பவயிடத்தைப் பார்வையிட்டு அ.சா.ஆ.5 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்ததை குறித்தும், சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து வழக்கு கோப்பை மேல்விசாரணைக்காக அ.சா.8 திரு.மோகன்தாஸ், உதவி ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்ததை அவர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு எதிரியை தேடி வந்த நிலையில் கடந்த 08.04.2015ம் தேதி நாட்றம்பள்ளி காவல் நிலைய குற்ற எண்.119/2015 பிரிவு 394 இதச வழக்கில் நாட்றம்பள்ளி காவல் ஆய்வாளர் திரு.பழனி என்பவர் புலன்விசாரணை செய்ததில் எதிரி முருகன் (எ) கானா முருகன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் திம்மாம்பேட்டை காவல் நிலைய சரகம் நாராயணபுரம் நாகாலம்மன் கோவிலில் திருடுபோன உண்டியல் பணம் ரூ.1500, பழைய ஆம்பிளிஃபையர் ஆகியவற்றை திருடியதாக தெரிய வந்ததை தெரிந்து கொண்டு 15.10.2015ம் தேதி திம்மாம்பேட்டை காவல் நிலைய குற்ற எண்.8/2015 இதச பிரிவுகள் 457, 380 என்ற வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி முருகன் (எ) கானா முருகன் மற்ற வழக்குகளில் மத்திய சிறையில் இருந்ததால் சம்பிரதாய கைது செய்வதற்கு ஆவணங்கள் தயார் செய்து நீதிமன்றத்தில் சமர்பித்து இவ்வழக்கின் புகார்தாரரான கிருஷ்ணனுக்கு எதிரியை பிடித்துவிட்டது குறித்தும், வழக்கு சொத்தான பணத்தை எதிரி செலவழித்து விட்டார் என்பதை தெரிவிப்பதற்காகவும் மீண்டும் வரவழைத்து மறுவாக்குமூலம் பதிவு செய்து எதிரி முருகன் (எ) கானா முருகனிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்த ஆய்வாளர் திரு.பழனி என்பவரை விசாரித்து அ.சா.ஆ.7 ஒப்புதல் வாக்குமூலத்தின் சான்றிட்ட உண்மை நகலையும், ஒப்புதல் வாக்குமூலத்தின் சாட்சிகளாக கையொப்பமிட்ட அ.சா.7 நேரு மற்றும் முருகன் த/பெ.செல்வம் ஆகிய இருவரின் குவிமுச பிரிவு 161(3) சான்றிட்ட நகலையும் பெற்று இவ்வழக்கில் திருடப்பட்ட உண்டியல் பணத்தை எதிரி செலவு செய்துவிட்டதாக கூறியதால் இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றி தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், தனது புலன்விசாரணையை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்ததை குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது. அ.சா.6 மற்றும் அ.சா.9ன் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், தங்களது அரசு பணியை சட்டப்படியாக செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது.

19. மேற்கண்ட சாட்சிய சான்றாவணங்களை ஒருங்கிணைந்து பார்க்கும்போது, புகார்தாரர் அ.சா.1 கிருஷ்ணன் அவரது சாட்சியத்தில் அ.சா.ஆ.1 புகார் மனுவில் உள்ள அவரது கையொப்பம் என்றும், அதில் என்ன விவரம் எழுதியுள்ளது என்ற விவரம் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளதால் இவ்வழக்கின் மூலஆதாரமான அ.சா.ஆ.1 புகார்மனுவே சந்தேகத்திற்கு உள்ளாகுவதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், அ.சா.1 கிருஷ்ணன் அவரது சாட்சியத்தில் அ.சா.3 மாணிக்கம்மாள் கூறியதின் அடிப்படையில் தான் சம்பவம் குறித்து தெரியும் என சாட்சியம் அளித்துள்ளதாலும், கேள்வியுற்ற சாட்சியான அசா.2 ஆனந்தன் வழக்கு விவரம் குறித்து தனக்கு தெரியாது என்றும், கோவிலில் உள்ள சிலை திருடுபோனதாக அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதாலும், அ.சா.3 மாணிக்கம்மாள் சுமார் 12 வருடங்களுக்கு முன்பு கோவிலில் யாரோ திருடிவிட்டு சென்றுவிட்டதாக போலிசார் வந்து விசாரித்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளதாலும், எதிரியை குற்றச்சம்பவத்துடன் தொடர்புபடுத்தி சாட்சியம் அளிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. பார்வை மகஜர் சாட்சியான அ.சா.4 திருப்பதி வெற்று வெள்ளை தாளில் கையெழுத்து வாங்கினார்கள் என சாட்சியம் அளித்துள்ளதாலும், மற்றொரு பார்வை மகஜர் சாட்சியான அ.சா.5 சாமு போலிசார் வந்து சென்றதற்காக என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என சாட்சியம் அளித்துள்ளதாலும், சம்பவ சூழ்நிலை சாட்சியான ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.7 நேரு அவரது சாட்சியத்தில் தற்போது எதிரியைப் பார்த்தால் என்னால் அடையாளம் கூற இயலுமா என்றால் 10 வருடங்களுக்கு மேல் ஆனதால் சரியாக நினைவிற்கு வருமா என்று தெரியவில்லை என்றும், திம்மாம்பேட்டை காவல் நிலையத்தார் பதிவு செய்த வழக்கு குறித்து நேரடியாக தெரியாது என்றும், அ.சா.ஆ.7 ஒப்புதல் வாக்குமூலம் எதிரியிடம் இருந்து தான் பெறப்பட்டதா என்ற சந்தேகம் எழுகிறது.

19(i). **தனிப்பட்ட விசாரணை இல்லாமை (Lack of Independent investigation)** அ.சா.ஆ.7 ஒப்புதல் வாக்குமூலத்தையும், அ.சா.7 நேருவின் 161(3) வாக்குமூலத்தையும் பரிசீலனை செய்கையில் இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியால் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலமோ, ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.7 நேருவிடம் இவ்வழக்கிற்காக

தனிப்பட்ட முறையில் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. நாட்றம்பள்ளி காவல் நிலைய குற்ற எண்.119/2019 என்ற வழக்கில் பதிவு செய்த ஒப்புதல் வாக்குமூலத்தையும், ஒப்புதல் வாக்குமூல சாட்சியின் 161(3) வாக்குமூலத்தையும் நாட்றம்பள்ளி காவல் நிலையத்தாரிடமிருந்து உண்மை நகல் பெற்று இவ்வழக்கில் தாக்கல் செய்து இருப்பது தெரியவருகிறது.

19(ii). **ஒப்புதல் வாக்குமூலத்தின் நம்பகத்தன்மை (Admissibility of Confession)**

நாட்றம்பள்ளி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்களை அப்படியே பயன்படுத்தியது ஏற்கதக்கதல்ல. இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 25 மற்றும் 27–ன் (Section 27 of Evidence Act) படி ஒரு புதிய கண்டுபிடிப்பு (Discovery of fact) நிகழ வேண்டுமெனில், அந்த வழக்கிற்கான தனிப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் அவசியம். முந்தைய வழக்கின் வாக்குமூலத்தை இந்தப் புதிய வழக்கிற்கு ஆதாரமாக பயன்படுத்த முடியாது. இது புலனாய்வில் ஒரு மிகப் பெரிய இடைவெளியை உருவாக்குகிறது. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 மற்றும் அ.சா.7ன் சாட்சியங்களின் மூலம் எதிரி தான் நாகாலம்மன் கோவிலில் பூட்டை உடைத்து கோயிலுக்கு உள்ளே சென்று இரண்டு உண்டியலை உடைத்து அதிலிருந்த பணத்தையும், ஆம்பிளிஃபையரையும் திருடிச்சென்றார் என்பதை நிரூபணம் செய்யவில்லை. எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் அரசு தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்பதால் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு எதிரி மீதான குற்றச்சாட்டை தீர்மானிக்க இயலாது. எனவே, அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட இ.த.ச பிரிவு 457, 380ன் கீழான குற்றம் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமற்ற வகையில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இவ்வழக்கில் மேற்கண்ட பிரச்சனைக்கு அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

20. <u>**முடிவாக**</u> இவ்வழக்கில் எதிரி மீதான இ.த.ச. பிரிவுகள் 457, 380–ன்கீழான குற்றங்களை பொறுத்து எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரி கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன்படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

21. இவ்வழக்கில் வழக்கு சொத்து இல்லை. எதிரி எழுதி கொடுத்த பிணை பத்திரத்தை மேல்முறையீடு காலத்திற்கு பின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்து சரிபார்க்கப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/-கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

**பிற்சேர்க்கை**

**அரசுத் தரப்பு சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| 1. | அ.சா.1 | திரு. கிருஷ்ணன் |
| 2. | அ.சா.2 | திரு. ஆனந்தன் |
| 3. | அ.சா.3 | திரு. மாணிக்கம்மாள் |
| 4. | அ.சா.4 | திரு. திருப்பதி |
| 5. | அ.சா.5 | திரு. சாமு |
| 6. | அ.சா.6 | திரு. சேகர், உதவி ஆய்வாளர் |
| 7. | அ.சா.7 | திரு. நேரு |
| 8. | அ.சா.8 | திரு. மோகன்தாஸ், உதவி ஆய்வாளர் |
| 9. | அ.சா.9 | திரு.பழனி, காவல் ஆய்வாளர். |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 29.01.2015 தேதியிட்ட புகார் மனு. |
| 2. | அ.சா.ஆ.2 | 29.01.2015 தேதியிட்ட பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெப்பம். |
| 3. | அ.சா.ஆ.3 | 29.01.2015 தேதியிட்ட பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெப்பம். |

| | | |
|---|---|---|
| 4. | அ.சா.ஆ.4 | 29.01.2015 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை. |
| 5. | அ.சா.ஆ.5 | 29.01.2015 தேதியிட்ட பார்வை மகசர். |
| 6. | அ.சா.ஆ.6 | 29.01.2015 தேதியிட்ட மாதிரிவரைபடம். |
| 7. | அ.சா.ஆ.7 | 27.04.2023 தேதியிட்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி. |

**அரசு தரப்பு சான்று பொருள்** – இல்லை.

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருட்கள்** –இல்லை.

**குறிப்பு**

1) எந்த சாட்சியும் 3 முறைக்குமேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

2) வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

3) முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

(ஒம்/–கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

//உண்மை நகல்//

SRIPATHI K

JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI
Digitally signed by SRIPATHI K
Location: TIRUPATHUR

நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.